Registered Number :
TN/MA/ 14/2018-2020
RNI No : TNTAM /2000/912
Date of publishing :
5th July 2018
Date of posting :
10, 11th July 2018
Posted at BPC, Madurai

கண் ஒளி

அரவிந்த் வெளியீடு

கண் நல விழிப்புணர்வு மாத இதழ்

ஆசிரியர்
டாக்டர்.ஜி.நாச்சியார்

ஆசிரியர் குழு
சித்ரா துளசிராஜ்
கோ. முருகராஜ்
திவ்யா ரமேஷ்

சந்தா பொறுப்பாளர்
ஜெ. பரிமளா


தொடர்புக்கு :
'கண்ஒளி'
அரவிந்த் கண்
மருத்துவமனை,
1, அண்ணாநகர்,
மதுரை – 625020

மின்னஞ்சல் :
kannoli@aravind.org

# கண் ஒளி

விழி 34 பார்வை 12 ஜூலை 2018

## சீரான உடல்நலனும் வாழ்வியல் முறைகளும்



இயற்கையும் புறச்சூழல்களும் நமக்கு ஒவ்வொரு நாளும் புதிய வாய்ப்புகளை வழங்கிக்கொண்டு இருக்கின்றன. நம்மையும் நாம் சார்ந்துள்ளவர்களையும் நம்மைச் சார்ந்து உள்ளவர்களையும் காக்க, சீரான உடல்நலனை, மனநலனைப் பேணிக் காப்பதற்கு புதிய வாய்ப்புகளை நமக்கு வழங்கி வருகின்றன. ஆனால் நாம்தான் அன்றாட சிக்கல்களில் மூழ்கி போகிறோம்.

நமது சிக்கல்களைப் பற்றியே சிந்திக்கவும் கவலைப்படவும் நேரம் ஒதுக்க முடியும் நமக்கு, நமது உடல்நலனிற்காகவும் நம் குடும்பத்தினர் உடல்நலனிற்காகவும் நேரம் ஒதுக்க முடிவதில்லை. நேரம் ஒதுக்க வேண்டும் என்பதற்காக உடனே மருத்துவமனைகளுக்கு சென்று முழு உடல் பரிசோதனை செய்து கொள்ள வேண்டியதில்லை. நாம் உண்ணும் உணவு குறித்தும், தினமும் நம்மால் கடைப்பிடிக்க வேண்டிய எளிய உடற்பயிற்சிகள் குறித்தும், யோகா, தியானம் குறித்தும் நம் குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் கலந்தாலோசித்து, விவாதித்து நமக்கு பொருந்துபவற்றை தினமும் கடைபிடிக்க முயற்சி செய்யத் தொடங்குவோம்.

சிலர் இவற்றைத் தொடங்கியதே இல்லை என்றாலும் வேறு சிலர் கட்டுப்பாடான உணவு முறை எனும் டயட்டை தொடங்கியிருப்பார்கள். நடைப்பயிற்சி, உடற்பயிற்சி போன்றவற்றைத் தொடங்கியிருப்பார்கள். ஆனால் சில நாட்களில் அவற்றை கைவிட்டு, திரும்பவும் பழைய வாழ்க்கைமுறைக்கே திரும்பியிருப்பார்கள்.

நமது உணவும், தூங்கும் நேரமும் எளிய பழக்கவழக்கங்களும்தான் நம் உடல்நலனைப் பெரிதளவும் நிர்ணயிக்கின்றன. சிகிச்சை எடுத்துக் கொள்பவர்கள் எனில் மருத்துவ முறைகளை முறையாகப் பின்பற்றுதல் மிக அவசியம். உடல்நலன் மீதான அக்கறை என்பது ஒரு நாளோ ஒரு மாதமோ மட்டும் கணக்கில் கொண்டு செயல்படுவதல்ல. ஒவ்வொரு நாளும் அக விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்.

*- ஆசிரியர் குழு*


அமெரிக்க, ஐரோப்பிய
மற்றும் உலக சுகாதார
நிறுவனத்தின் (WHO)
தரநிலைகள்
பூர்த்தி செய்யப்படுகின்றன
உலக தரத்திற்கு இணையான
தயாரிப்புகள் வாங்கக்கூடிய
விலையில்
மடங்ககூடிய மற்றும் மடங்காத
உள்விழி லென்ஸ்கள்
கண்சொட்டு மருந்துகள்
74% பணியாளர்கள் பெண்கள்
கண்மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் தயாரிப்பில் 20 வருடத்திற்கும் மேலாக அனுபவமிக்க நிறுவனம்.
2014-ம் ஆண்டிற்கான CNN-IBN சேனலின் "நாளைய நல்வாழ்விற்கான கண்டுபிடிப்புகள்" விருது பெற்ற நிறுவனம்.
TÜVRheinland
EN ISO 9001 : 2008
EN ISO 13485 : 2012 / AC : 2012
உலகம் முழுவதிலும் 140-க்கும் அதிகமான நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது
CE
0197
மருத்துவ கருவிகளை
ஐரோப்பிய நாடுகளில்
விற்பதற்கான CE முத்திரை
aurolab
மேலும் தொடர்புக்கு
போன்:0452-3096 100
இ-மெயில்: info@aurolab.com
web:www.aurolab.com

# குறைமாத குழந்தைகளுக்கு விழித்திரையில் ஏற்படும் பாதிப்பு



குழந்தையிலேயே கண் பார்வை இல்லாமல் போனால் அது எத்தனை துயரமாக இருக்கும்? குறைமாதத்தில் பிறக்கும் குழந்தைகள் அல்லது எடை குறைவாகப் பிறக்கும் குழந்தைகள் விழித்திரையில் ஏற்படும் பாதிப்புகளால் பார்வை இழந்து வருகிறார்கள். பெற்றோர்களின் அலட்சியத்தாலும் அறியாமையினாலும் தகுந்த மருத்துவ வசதிகள் இல்லாததாலும் எத்தனையோ குறைமாதத்தில் பிறக்கும் குழந்தைகள் பார்வையை இழந்து வருகிறார்கள். குறைமாதங்களில் பிறக்கும் குழந்தைகள் நமது நாட்டில் எத்தனையோ பேர் உள்ளனர். அந்தக் குழந்தைகளின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களிடம் நிலவும் அறியாமை மற்றும் மூடநம்பிக்கையையும் நீக்கி அவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியது நமது கடமை.

தாயின் வயிற்றில் இருக்கும்போது குழந்தையின் கண்ணில் உள்ள இரத்த நாளங்களின் வளர்ச்சியானது நடுப்பகுதியிலிருந்து ஓரப்பகுதியை நோக்கி வளரும். குறைமாதத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு இரத்த நாளங்களின் வளர்ச்சி சீராக இருப்பதில்லை. இந்தியாவில் குறைமாதத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்பு 38% முதல் 51.9% ஆக உள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதுவும் 900 கிராமுக்கு குறைவாக மற்றும் 25 வாரங்களுக்கு முன் பிறக்கும் குழந்தைகளே 80 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை பாதிக்கப்படுவதாகப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.


இதில் ஆச்சரியம் என்னவெனில் நவீன மருத்துவ வசதிகள் பெருகி உள்ள போதிலும் குறைமாத குழந்தைகளுக்கு விழித்திரையில் ஏற்படும் பாதிப்பின் சதவீதமும் கூடிக்கொண்டே போகிறது. இந்தியா போன்ற பரந்து விரிந்த நாட்டில் மருத்துவர்களிடம் கூட இந்நோய் பற்றி போதுமான விழிப்புணர்வு ஏற்படவில்லை என்பதுதான் துரதிரஷ்டவசமான உண்மை. இக்குறைபாட்டை நீக்கும் வசதிகள் இருந்தும் சரியான திட்டமிடலும் அணுகுமுறையும் இல்லாததால் எத்தனையோ குழந்தைகள் சிகிச்சை இல்லாமல் பாதிக்கப்படுகின்றனர்.




ROP குறைபாட்டால் பார்வை இழந்த குழந்தைகளுக்கு ஏற்படும் சமூக, பொருளாதார பாதிப்புகள் அதிகம். இந்த அவல நிலையைப் போக்க, அரவிந்த் கண் மருத்துவக் குழுமமானது அரசு மருத்துவமனைகளில் குறைமாதத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு விழித்திரையில் ஏற்படும் பாதிப்பைச் சரிசெய்ய அவர்களுக்கு சிகிச்சை அளித்து உரிய வகையில் உதவ, திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் பெயர் "ROPE SOS" (Retinopathy of Prematurity Eradication-Save our Sight). அரசு மருத்துவமனைகளில் குறைமாதத்தில் பிறந்து, விழித்திரை பாதிப்பினால் அவதியுறும் குழந்தைகளுக்கு பெரிதும் உதவும் வகையில் இத்திட்டம் அமைந்துள்ளது.

சிறப்பு தேர்ச்சி பெற்ற டெக்னீஷியன்களும் செவிலியர்களும் RetCam எனும் சிறப்புக் கேமரா உடன், வாகனத்தில் அரசு மருத்துவமனைகளுக்குச் செல்கின்றனர். அங்கு இரண்டு கிலோ அல்லது அதற்கு குறைவான எடையுடன் பிறந்துள்ள குழந்தைகள் மற்றும் 36 வாரங்கள் அல்லது அதற்கு குறைவான வாரங்களில் பிறந்து கடுமையான மூச்சுத் திணறல், தொற்று, இரத்த ஏற்றம் ஏற்படுதல் போன்ற சிக்கல்களால் அவதியுறும் குழந்தைகளின் விழித்திரை உட்பாகத்தை RetCam கேமரா மூலம் படமெடுத்து அதை இணையதள வசதி கொண்டு அரவிந்த் தலைமை மருத்துவமனைக்கு அனுப்புகின்றனர். அங்கு, விழித்திரையில் நிபுணத்துவம் பெற்ற கண் மருத்துவர்கள் பார்த்து பரிசோதனை செய்து, உடனடியாக அக்குழந்தையின் பாதிப்பு பற்றிய அறிக்கையை குழந்தை இருக்கும் அரசு மருத்துவமனைக்கே அனுப்புகின்றனர். அதுமட்டுமன்றி, பாதிக்கப்பட்டுள்ள




தரமான கண் கண்ணாடிகள் வாங்க எங்களை அணுகுங்கள்

ARAVIND OPTICALS

அரவிந்த் ஆப்டிகல்ஸ்

அரவிந்த் கண்மருத்துவமனை

1, அண்ணாநகர், மதுரை - 625 020

தொலைபேசி - 0452-4356164

- புரொக்ரஸிவ் லென்ஸ்கள்
- பிளாஸ்டிக் லென்ஸ்கள்– லேசான, உடையாத லென்ஸ்கள்
- பிரதிபலிப்பு இல்லாத கண்ணாடிகள்
- கீறல் விழாத கண்ணாடிகள் மற்றும் ஏராளமான அழகிய பிரேம்கள்



குழந்தைகளைத் தொடர்ச்சியாகப் பரிசோதனை செய்து விழித்திரையின் வளர்ச்சியைக் கண்காணிக்கிறார்கள். விழித்திரை பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் பெற்றோர்களுக்கு நோயின் தன்மை பற்றியும் அதன் விளைவு பற்றியும் தெளிவாக எடுத்துரைத்து விழிப்புணர்வை ஏற்படுத்தி, மேற்கொண்டு செய்ய வேண்டிய சிகிச்சை முறைகளையும் விளக்குகின்றனர் செவிலியர்கள். பச்சிளம் குழந்தைப் பிரிவில் உள்ள குழந்தைகள், குறைமாதத்தில் பிறந்த குழந்தைகள், எடை குறைவாக உள்ள குழந்தைகளைப் பிறந்த ஒரு மாதக் காலத்தில் ROPE பரிசோதனை செய்ய வேண்டியது அவசியம். விழித்திரையில் அதிகம் பாதிப்பு இல்லாத குழந்தைகளுக்கு சிகிச்சை தேவைப்படுவதில்லை. நாளடைவில் குழந்தை வளர, வளர ரத்த நாளங்களின் வளர்ச்சி சீராகி விடும். ஆனால், விழித்திரை விலகல் இல்லாத குழந்தைகளுக்கு லேசர் சிகிச்சை செய்வதின் மூலம் இரத்த நாளங்களின் ஒழுங்கற்ற வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகின்றனர். லேசர் சிகிச்சையின் மூலம் விழித்திரைப் பிரிதலைப் பெரிய அளவில் தடுக்க முடியும். விழித்திரை பிரிதல் ஏற்பட்டால் அறுவை சிகிச்சை மட்டும்தான் ஒரே வழி. சிகிச்சைக்குப் பிறகும் குழந்தைகளுக்கு விழித்திரை பாதிப்புகள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ளன. எனவே, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு வாழ்நாள் முழுவதும் கடைபிடிக்க வேண்டிய தொடர் பரிசோதனைகள் மற்றும் மறுவாழ்விற்கான முறைகளையும் பின்பற்றி வர எடுத்துச் சொல்கிறார்கள்.

குறிப்பிட்ட வயது வரை முப்பது நாட்களுக்கு ஒருமுறை அல்லது வருடம் ஒருமுறையாவது மறுபரிசோதனை செய்வது அவசியம். மற்ற குழந்தைகளைவிட குறைமாதத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு பார்வைத்திறன் குறைபாடு, மாறுகண், சோம்பேறிக்கண், விழித்திரைப் பிரிதல், கண் நீர் அழுத்தம் போன்ற நோய்கள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளன. எனவே, தொடர் பரிசோதனை என்பது மிக அவசியமானது.

ROPE SOS எனும் இயக்கமானது, பல்வேறு மாவட்டங்களில் உள்ள உள்ளூர் மருத்துவர்கள், குழந்தை நல மருத்துவர்கள், அதிநவீன தீவிர சிகிச்சையளிக்கும் செவிலியர்கள் மற்றும் பொதுமக்கள், குழந்தைகளின் பெற்றோர்கள், உறவினர்களுக்கு அவ்வப்போது தொடர் மருத்துவ விழிப்புணர்வை அளித்து வருகிறது.

இவ்வுலகைக் காண, எல்லோருக்கும் உரிமை உண்டு. எனவே, பார்வை என்பது ஒவ்வொரு குழந்தையின் பிறப்புரிமை என்பதை மனதில் கொண்டு பொறுப்புள்ள குடிமகன்களாகச் செயல்படுவோம். நாம் அனைவரும் ஒன்றிணைந்து உலகில் விழிப்புணர்வை உருவாக்குவோம். விழித்திரை பாதிப்புகளால் அவதியுறும் குழந்தைகளைக் கண்டறிந்து மருத்துவச் சிகிச்சை பெற உதவி செய்வோம். தேவையற்ற கண் பார்வை இழப்பை நீக்குவோம் என்ற உயரிய இலட்சியத்துடன் செயல்படும் அரவிந்தின் ROPE-SOS குழுவினருடன் கரம் கோர்த்து செயல்படுவோம்.

சின்னஞ்சிறு குழந்தைகளின் கண்களில் ஒளி வீசட்டும்! மகிழ்ச்சி பொங்கட்டும்!

- **ROP** ***குழுவினர், அரவிந்த் கோயம்புத்தூர்***

## ''கண் ஒளி'' இதழுக்கான சந்தா செலுத்த...

ஒரு வருடச் சந்தா: ரூ.25/–. ஐந்து வருடச் சந்தா: ரூ.120/–

''கண் ஒளி'' இதழுக்குச் சந்தா செலுத்த விரும்புபவர்கள், சந்தாத் தொகையை மணியார்டர் அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம். உங்களது தெளிவான முகவரி, தொலைபேசி எண் மற்றும் அஞ்சல் இலக்க எண்ணையும் குறிப்பிட்டு, 'கண் ஒளி சந்தாவுக்கு' என எழுதவும்.


**காசாளர், கண் ஒளி, அரவிந்த் கண் மருத்துவமனை,**

**1, அண்ணா நகர், மதுரை – 625 020**

# கண் நீர் அழுத்த நோய்

இந்தியாவில் பார்வை இழப்பிற்கு கண் நீர் அழுத்த நோயும் முக்கிய காரணமாக உள்ளது. கண் நீர் அழுத்த நோய் பற்றி நாம் அனைவரும் தெரிந்து கொள்வது மிக அவசியம். நோயாளிக்கே தெரியாமல் அவரைத் தாக்கி அவரது கண் பார்வையைப் பறித்து விடும் ஆபத்தான நோய். எனவே இதைப் பார்வைத் திருடன் என மருத்துவ உலகில் குறிப்பிடுகிறார்கள். ஆங்கிலத்தில் இந்நோயை கிளக்கோமா என அழைக்கிறார்கள். உலகெங்கிலும் 70 மில்லியன் பேர் கிளக்கோமா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் அதில் பாதி நபர்களுக்குக் கூட தங்களுக்கு இந்த குறைபாடு உள்ளது என்பது தெரியாது. சிகிச்சை செய்யாமல் விட்டு விட்டால் கிளக்கோமா, பார்வையை முழுவதும் பறித்து விடும். உலகில் 8.4 மில்லியன் மக்கள் கிளக்கோமா நோயினால் பார்வையை இழந்த நிலையில் உள்ளனர். 2020 ஆம் ஆண்டிற்குள் இந்த எண்ணிக்கை 11 மில்லியன் அளவில் அதிகரிக்கும் அபாயம் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.


கண்நீர் அழுத்த நோய்க்கு ஆரம்ப அறிகுறிகள் கிடையாது


சரியான சிகிச்சை மேற்கொள்ளாவிட்டால் இந்நோய் தீவிரமடைந்து . . .


. . . நிரந்தர பார்வையிழப்பிற்கு வழிவகுக்கும்

கண்ணில் சாதாரணமாக ஒரு அழுத்தம் இருக்கும். உடலில் அழுத்தம் இருப்பதுபோல கண்ணிலும் அழுத்தம் இருக்கும். அளவுக்கு அதிகமான அழுத்தம், கண்ணில் ஏற்படும்போது அது கண்ணில் உள்ள நரம்புகளை அழுத்தி, அழுத்தி பக்கப்பார்வையை முதலில் குறைத்து விடும். ஆரம்பக் கட்டத்தில் நேர் பார்வை நன்றாகவே இருக்கும். ஆனால், பக்கப்பார்வை குறைந்துகொண்டே வரும். கண்ணில் முன்ரசம், பின்ரசம் என இரண்டு திரவங்கள் உள்ளன. இந்தக் முன்கண் ரசமானது கண்ணில் உள்ள சிலியாரி தசைகளால் சுரக்கப்படுகிறது. கருவிழிக்கும் உதர விதானத்திற்கும் நடுவில் உள்ள சல்லடை போன்ற அமைப்பின் மூலம் இந்த திரவம் கண்ணை விட்டு வெளியேறி, ரத்தத்துடன் கலந்து விடுகிறது. இந்த நீர் வெளியேற ஏதேனும் தடை ஏற்பட்டாலோ அடைப்பு ஏற்பட்டாலோ இந்தத் திரவம் கண்ணுக்குள்ளேயே தேங்கி விடுகிறது. இதனால் கண்ணுக்குள் அழுத்தம் அதிகமாகிறது. இது ஒரு காரணம். மற்றொரு காரணம் என்னவெனில், சுரக்கும் திரவம் அளவுக்கு அதிகமாகச் சுரந்தாலோ கிளக்கோமா வருவதற்கான சாத்தியம் உள்ளது.

வயதானவர்களுக்கு அதிக பாதிப்பு ஏற்படும் என்றாலும் எல்லா வயதினருக்கும் இந்த நோய் ஏற்படக்கூடும். குடும்பத்தில் யாருக்காவது கிளக்கோமா நோய் இருந்தாலோ அல்லது சில மருத்துவச் சிக்கல்கள் இருந்தாலோ இந்த நோயினால் தாக்கப்படும் அபாயம் கூடுதலாக உள்ளது. நாற்பது வயதிற்கு மேற்பட்ட அனைவருமே முறையான கண் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். குடும்பத்தில் யாருக்கேனும் கிளக்கோமா இருக்கும் பட்சத்தில் குடும்பத்தில் உள்ள மற்ற நபர்களும் கண்டிப்பாக கிளக்கோமா பரிசோதனை செய்து கொள்ள

**கண் ஒளி இதழ் பற்றிய உங்கள் கருத்துகள், விமர்சனங்கள், யோசனைகளைப் பகிர்ந்துக் கொள்ள:**
கண் ஒளி, அரவிந்த் கண் மருத்துவமனை,
1, அண்ணா நகர், மதுரை – 625020. மின்னஞ்சல் மூலமாக அனுப்ப : kannoli@aravind.org



குடும்பத்தில் யாருக்கேனும் இப்பாதிப்பு இருப்பின் அவர்களுக்கும், அவர்களது இரத்த சம்பந்தமுள்ள உறவினர்களுக்கும் கண் பரிசோதனை செய்து கொள்வது அவசியம்.

வேண்டும். கிட்டப்பார்வை உள்ளவர்களுக்கு கிளக்கோமா வருவதற்கான சாத்தியங்கள் அதிகமாக உள்ளன. சர்க்கரை நோயாளிகள், இரத்த அழுத்த நோயாளிகள், கண்ணில் காயமோ நோயோ ஏற்பட்டவர்கள், பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். சில வேளைகளில் பக்கத்தில் உள்ளவர்கள் ‘‘என்னப்பா, பக்கத்தில் வந்து நிக்குறேன், தெரிலையா’’ என சொல்லித்தான் கிளக்கோமா நோயாளிகளுக்கு தெரியும் நமக்கு பக்கப்பார்வை தெரியவில்லை என்று. இதை டியூபுலர் விஷன் என்று சொல்வார்கள். டியூப் வழியாகப் பார்ப்பது போல அவர்கள் உணர்வார்கள். வாகனம் ஓட்டும்போது, சாலையைக் கடக்கும்போது பக்கப்பார்வை மிகவும் அவசியம். எனவே முழுப்பார்வையுடன் நாம் வாழ்வது நமக்கும் நல்லது. நாம் சார்ந்துள்ள நம் குடும்பத்திற்கும் நல்லது.

சிக்கலான விஷயம் என்னவெனில் கிளக்கோமா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளோமா என்பதைக் கண்டறிய வெளிப்படையாக எவ்வித அறிகுறிகளும் தோன்றாது. கிளக்கோமா இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளும் முன்பே கிளக்கோமா நோயாளிகளில் நாற்பது சதவீத மக்கள் பார்வையை இழந்து விடுகிறார்கள். எனவே குறிப்பிட்ட கால இடைவெளியில் முறையான, விரிவான கண் பரிசோதனையை அனைவரும் செய்து கொள்வது அவசியம்.

### சிகிச்சை முறைகள்:

தலைவலி, காய்ச்சல் வந்தால் மாத்திரை எடுத்துக்கொண்டால்போதும் சரியாகி விடும் என்பதுபோல் கிளக்கோமாவுக்கான சிகிச்சை கிடையாது. சர்க்கரைநோய், இரத்த அழுத்தம் போன்ற நோய்க்கு சிகிச்சை எடுத்து கொள்வதுபோல தொடர்ந்து சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும், இது வாழ்நாள் நோயாகும். வாழ்நாள் நோய் என்பதற்காக பதட்டப்படவோ பயப்படவோ தேவையில்லை. நம்மில் எத்தனை சர்க்கரை நோயாளிகள் இயல்பாக வாழ்வை எதிர்கொள்கின்றனர். அதுபோல கிளக்கோமாவால் பாதிக்கப்பட்டவர்களும் இயல்பாக இருக்கலாம். சிகிச்சை முறைகளில் மட்டும் போதிய கவனம் செலுத்தினால் போதும்.

முதல் சிகிச்சை முறை – சொட்டு மருந்துகளும் மாத்திரைகளும். இரண்டாவது நிலை – லேசர் சிகிச்சை. மூன்றாவது நிலை – அறுவை சிகிச்சை. பை–பாஸ் அறுவை சிகிச்சை போல் கண்ணுக்கும் பை–பாஸ் அறுவை சிகிச்சை செய்யப்படும்.

பார்வையில் முன்னேற்றம் என்பதோ பொருட்களை முன்னை விட தெளிவாகப் பார்க்க முடியும் என்பதோ கிளக்கோமா சிகிச்சை முறைகளால் ஏற்படாது; இருக்கும் பார்வையை அதாவது சிகிச்சை தொடங்கும்போது பார்வை எவ்வவாறு இருந்ததோ அதைத் தொடர்ந்து தக்க வைக்கவே முடியும்.

கிளக்கோமா நோயாளிக்கு கண் மருத்துவர்கள் மருந்துகளைப் பரிந்துரைக்கும் முன்னர் நோயாளிகளின் உடல் நிலையையும் அவர்கள் எடுத்துகொள்ளும் பிற மருந்துகளையும் கருத்தில் கொண்டே கிளக்கோமாவுக்கான மருந்துகளைப் பரிந்துரைப்பார்கள். எனவே, கிளக்கோமா சிகிச்சை முறைகளால் எவ்வித பக்க விளைவுகளும் நோயாளிகளுக்கு ஏற்படாது. ஆரம்ப நிலையில் கிளக்கோமாவின் பாதிப்புகள் குறைவாகவே இருக்கும். ஆனால், முற்றிய நிலையில் இதன் பாதிப்புகள் மிகத் தீவிரமாக இருக்கும். முழுமையான பார்வையிழப்புக்கு உள்ளாக நேரிடும். ●

**‘‘கண் ஒளி’’ இதழுக்கான சந்தாவைப் பரிசளிக்க...**

உங்கள் அன்புக்குரியவர்களுக்கு பிறந்தநாள், திருமண நாள் பரிசாக ‘கண் ஒளி’ இதழுக்கான சந்தாவைச் செலுத்தவும். மணியார்டர் படிவத்தில் அவர்களது தெளிவான முகவரி, தொலைபேசி எண் மற்றும் அஞ்சல் இலக்க எண்ணையும் குறிப்பிட்டு, ‘கண் ஒளி சந்தாவுக்கு’ என எழுதவும்.

**அனுப்ப வேண்டிய முகவரி**

காசாளர், கண் ஒளி, அரவிந்த் கண் மருத்துவமனை, 1 அண்ணா நகர், மதுரை - 625 020.

# குழந்தைகளுக்கு ஏற்படும் கண்புரை நோய்கள்

**அறிமுகம்:**



கண்ணில் உள்ள லென்ஸில் வெள்ளை நிறப் படிமம் படிவதே கண்புரை எனப்படுகிறது. பொதுவாக, ஒளியை அனுமதிக்கும் லென்ஸ், கண்புரையால் பாதிக்கப்பட்டிருந்தால் ஒளியை அனுமதிக்காது. இதன் விளைவு, பார்வை மங்கலாகத் தெரியும். கண்புரையானது ஒரு கண்ணிலோ இரு கண்ணிலோ வரலாம். பெரியவர்களை கண்புரை பொதுவாக பாதித்தாலும் குழந்தைகளையும் சிறுவர்களையும் தாக்கும் அபாயமும் உள்ளது. குழந்தைகளின் கண்கள் வளர்ந்து கொண்டே இருக்கும் என்பதால், அவர்களுக்கு கண்புரை ஏற்பட்டிருந்தால் அதற்கு உடனடியாகச் சிகிச்சை எடுத்துகொள்ள வேண்டும். சிகிச்சையைத் தாமதப்படுத்தினால் சோம்பேறிக் கண் எனும் குறைபாடு ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது.

**வகைகள்:**

இருவகை கண்புரைகள் உள்ளன. பிறவிக் கண்புரை மற்றும் இளம் வயதில் ஏற்படும் கண்புரை. பிறவிக் கண்புரை என்பது பிறந்த குழந்தைகளுக்கு பிறக்கும்போதே உள்ள கண்புரை. இளம் வயதில் ஏற்படும் கண்புரை என்பது சிறுகுழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் ஏற்படுவது.

**ஏற்படுவதற்கான காரணங்கள்:**

குழந்தைகளுக்கு கண்புரை ஏற்படுவதற்கான சரியான காரணங்களை இன்னும் கண்டறிய முடியவில்லை. பிறவிக் கண்புரை தாக்குவதற்கு மரபணுச் சிக்கல்கள் காரணமாக உள்ளன. கருவுற்ற காலத்தில் தாய்க்கு ஏற்பட்ட தொற்று நோய்களும் காரணமாக அமைகின்றன.

இளம் வயதில் ஏற்படும் கண்புரை என்பது கண்ணில் அடிபடுதல், ஒட்டுண்ணியால் ஏற்படும் தொற்று, களக்டோஸமியா (பாலில் உள்ள சர்க்கரை, உடலில் கலக்காததால் ஏற்படும் குறைபாடு), நீரிழிவு போன்ற காரணங்களால் ஏற்படும்.

உங்கள் குடும்பத்தில் யாருக்கேனும் குழந்தைப் பருவத்தில் கண்புரை ஏற்பட்டிருந்தால் உங்கள் பிள்ளைகளுக்கும் ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

**அறிகுறிகள்:**

– மோசமான பார்வை
– வேகமான ஆடும் நிலையில் கண் அசைவுகள்
– வெவ்வேறு திசைகளைப் பார்த்தபடி கண்கள் இருப்பது
– வெள்ளை அல்லது சாம்பல் நிறத்தில் கருவிழி இருப்பது.

இந்த அறிகுறிகள், குழந்தைகளிடம் உள்ளதா என்பதைக் கண்டறிவது சற்று சிரமமான காரியம்தான். பிறரைக் கண்டறியவோ பொருட்களைப் பார்க்கவோ குழந்தைகள் நீண்ட நேரம் எடுத்துக்கொண்டாலோ அவை உங்களது குழந்தைக்கு ஏதோ தவறாக உள்ளது என்பதை உங்களுக்கு அறிவிக்கும் எச்சரிக்கைக் குறிப்புகள்.

**குழந்தைகளுக்கான அறுவை சிகிச்சைகள்:**

அறுவை சிகிச்சை ஒன்றே கண்புரைக்கான சிகிச்சை. குழந்தைகளுக்கான கண்மருத்துவ அறுவை சிகிச்சை நிபுணர்கள், இந்த அறுவை சிகிச்சையை மிகவும் கவனத்துடன் மேற்கொள்வார்கள். சில குழந்தைகள், அறுவை சிகிச்சைக்குப் பிறகு கண்ணாடி அணிய வேண்டியிருக்கும்.

கண்புரை என்பது பரிசோதனையில் கண்டறியப்பட்டதும் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அறுவை சிகிச்சையை விரைவாக மேற்கொள்ள வேண்டியது மிக அவசியம். அறுவை சிகிச்சைக்கு முன்னதாகக் குழந்தைகளுக்கு வலி தெரியாமல் இருக்க, மயக்க மருந்து (General Anasthesia) கொடுக்கப்படும். மிகப் பாதுகாப்பான முறையில் அறுவை சிகிச்சை செய்யப்படுவதுடன் குறைவான நேரத்தில் முடிந்துவிடும். பெரும்பாலான நேரங்களில் மிகத் தெளிவான பார்வை அப்போதே கிடைத்து விடும்.

### அறுவைசிகிச்சையின் வகைகள்:

எல்லா கண்புரை அறுவை சிகிச்சைகளிலும் கண்களில் உள்ள புரை நீக்கப்படும். எனினும், மருத்துவர் பின்வரும் காரணங்களில் ஒன்றைத் தேர்வுசெய்வார்.

கண்புரை உள்ள லென்ஸ் அகற்றப்பட்டபின், உங்கள் குழந்தை கண்ணாடியோ காண்டாக்ட் லென்ஸ் எனப்படும் ஒட்டுக் கண்ணாடியையோ அணியலாம்.

கண்புரை உள்ள லென்ஸிற்கு பதிலாக இன்டிராகுலர் லென்ஸ் பொருத்தப்படும்.

எந்த முறை சிறந்தது என்பதை மருத்துவர் பின்வரும் காரணிகளைக் கருத்தில் கொண்டு மேற்கொள்வார்கள்.

1. குழந்தையின் வயது
2. கண்புரையின் வகை
3. பிற கண் நோய்கள்

நிலைமையைப் புரிந்துகொள்ளும் நிலையில் பெற்றோர்கள் உள்ளார்களா என்பதைப் பொறுத்து இரண்டு வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு IOL லென்ஸ் மிகப் பாதுகாப்பானது. வெகு சில நேரங்களில் அந்த வயதைவிடக் குறைவான குழந்தைகளுக்கும் பொருத்தப்படும்.

### அறுவை சிகிச்சைக்குப் பின்:

கண் பரிசோதனைகளுக்கு குழந்தைகள் கண்டிப்பாக செல்ல வேண்டும். எவ்வளவு கால இடைவெளியில் நீங்கள் வரவேண்டும் என்பதை மருத்துவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

கண்கள் குணமாகி வருவதை உறுதி செய்துகொள்ள இரண்டு, மூன்று நாட்கள் குழந்தையானது மருத்துவமனையிலேயே தங்கி இருக்க வேண்டும்.

நான்கு முதல் ஆறு வாரங்களுக்கு வெளியில் செல்வதைக் குழந்தை கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். கண்ணில் அடிபடுவதைக் குறைக்கவே இந்த முன்னெச்சரிக்கை.

குழந்தை, அறுவை சிகிச்சை வகையைப் பொறுத்து கண்ணாடி கட்டாயம் அணிய வேண்டும். பெற்றோர்கள் கேட்கும் சில பொதுவான கேள்விகளும் அவற்றிற்கு எங்கள் ஆலோசகர்கள் அளிக்கும் பதில்களும்

### பிறந்த குழந்தைக்கு இரு கண்களிலும் கண்புரை இருப்பது தெரியவந்தால், உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமா?

ஆம். பிறந்து ஆறு வாரங்கள் கழித்துக்கூட அறுவை சிகிச்சை செய்யலாம். பெரும்பாலும், பிறந்து இரண்டு – மூன்று மாதங்களில் குழந்தைக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டும்.

### இரண்டு மாதக் குழந்தையால் அறுவை சிகிச்சையைத் தாங்கிக் கொள்ள முடியுமா?

முடியும். தொழில்நுட்பமும் அறுவை சிகிச்சை முறைகளும் மிகவும் மேம்பட்டுவிட்டன. பயப்படத் தேவையில்லை. அறுவை சிகிச்சைக்கு முன்பாக மருந்து கொடுக்கப்படும். மருத்துவர்கள், அறுவை சிகிச்சையை மிகக் கவனமாகச் செய்வார்கள்.

### கண்புரை அறுவை சிகிச்சைக்குப் பிறகு தெளிவான பார்வை கிடைக்குமா?


பின்வரும் நிலைகளைப் பொறுத்தே, இதற்கு சரியான பதில் கூற முடியும்:

- உங்கள் குழந்தையின் வயது
- அறுவை சிகிச்சையின் வகை
- கண்புரை தாக்கப்பட்ட காலத்திற்கும் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட காலத்திற்கும் இடையேயான இடைவெளி
- கண்ணாடியைத் தொடர்ந்து குழந்தைகள் அணிகிறார்களா என்பதன் அடிப்படையில்,
- கண்களும் மூளையும் எந்த அளவில் வளர்ச்சி அடைந்து கொண்டு வருகிறது என்பதன் அடிப்படையில்,
- கருவிழி, விழித்திரையில் உள்ள குறைபாடு மற்றும் மாறுகண் போன்றவற்றின் அடிப்படையில்.

கண்புரையின் தீவிரம் குறைவாக இருந்தாலோ ஆரம்பக் காலக்கட்டத்திலே சிகிச்சை மேற்கொள்ளப்பட்டாலோ சிறப்பான பார்வை கிடைப்பதற்கு மிக அதிக வாய்ப்புகள் உள்ளன.

*எழுத்து வடிவம்: கோ. முருகராஜ்*

# வண்ணப் பார்வையிழப்பு



சில வேலைகளுக்கு வண்ணப்பார்வை மிகவும் அவசியம். சில உதாரணங்கள் – ஓட்டுநர், காவல்துறையினர், விமானி, ராணுவத்தினர். நமது விழித்திரையில் உள்ள கூம்பு செல்கள், வண்ணங்களைக் காண உதவுகின்றன. சிவப்பு, நீளம், பச்சை நிறங்கள் முதன்மை நிறங்களாகும். (Primary Colours). மற்ற நிறங்கள் அனைத்தும் இதன் கலவைகளே. வண்ணப் பார்வை என்பது பல்வேறு நிறங்களைப் பார்த்து அறியக்கூடிய பார்வைத்திறன் ஆகும். வண்ணங்களைப் பிரித்து பார்க்க முடியாதவர்கள் மற்றும் உணராதவர்களுக்கு வண்ணப் பார்வையிழப்பு ஏற்படுகிறது.

வண்ணப் பார்வை இழப்பில் இரண்டு வகை உண்டு. பரம்பரைக் கோளாறாக ஏற்படுவது. மற்றொன்று பார்வை நரம்பு பாதிப்பு அல்லது விழித்திரை நோய் பாதிப்பால் ஏற்படுவது. பரம்பரை நோயினால் ஏற்படும் வண்ணப் பார்வை இழப்பினால் இரண்டு கண்களும் பாதிக்கப்படக்கூடும். காலப்போக்கில் இதன் பாதிப்பு அதிகரிக்கக்கூடும். வண்ணப் பார்வையிழப்பு, ஒரு சில நிறங்களை மட்டும் கண்டறிவதில் தடுமாற்றம் அல்லது இயலாமை ஏற்படுத்துவதாகவோ எல்லா நிறங்களையும் கண்டறிவதில் தடுமாற்றம் அல்லது இயலாமை ஏற்படுத்துவதாகவோ இருக்கலாம். இதில் இரண்டாவது வகை பாதிப்பு உடையவர்களுக்கு வேறு ஏதேனும் கடுமையான கண் பிரச்சனைகளும் இருப்பதுண்டு.

நமது கண்ணின் உட்புறம் உள்ள விழித்திரையின் மையப்பகுதியில் நுண்ணிய கூம்பு போன்ற ஒளிவாங்கி செல்கள் உள்ளன. இவற்றில் சிவப்பு, பச்சை, நீலம் ஆகிய மூன்று நிறங்களின் படிமங்கள் உள்ளன. இந்தப் படிமங்களில் குறைபாடு இருந்தாலோ ஏதாவது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட படிவங்கள் இல்லாத நிலை இருந்தாலோ நிறங்களை அடையாளம் காண்பதில் தடுமாற்றமோ இயலமையோ ஏற்படும்.

வண்ணப் பார்வையிழப்பு என்பது பிறக்கும் போதே இருந்ததா பிறந்த பின் கண்ணிற்குள் உருவான குறைபாடு காரணமாக ஏற்பட்டதா, அரைகுறையானதா அல்லது முழு அளவிலான வண்ணப் பார்வையிழப்பா என்பதைப் பொறுத்து அறிகுறிகள் மாறுபடும். சிவப்பு அல்லது செம்மை நிறச் சாயல்கள் ஆகியவற்றை பாகுபடுத்திச் சொல்வதில் சிரமம் இருக்கும். நீலம் அல்லது நீல நிறச் சாயல்கள் ஆகியவற்றை பாகுபடுத்திச் சொல்வதில் சிரமம் இருக்கும். எந்தப் பொருளைப் பார்த்தாலும் சாம்பல் நிறச் சாயல்களாகத் தெரியும்.

வண்ணப் பார்வையிழப்புக் குறைபாடு இருக்கிறதா இல்லையா என்பதை உறுதிப்படுத்த இஷிஹாரா (Ishihara) பிளேட்ஸ் எனப்படும் கலர் அட்டைகளைக் கொண்டு நோயாளிகளின் பார்வையைப் பரிசோதனை செய்வார்கள். ஒவ்வொரு அட்டையிலும் கலர் புள்ளிகளால் உருவான ஒரு எண் இருக்கும். ஒவ்வொரு அட்டையையும் பார்த்து, அதில் எந்த எண் உள்ளது என்று நோயாளியிடம் கேட்பார்கள். அவர் சொல்லும் பதிலை வைத்து, அவருக்கு எந்த மாதிரியான வண்ணப் பார்வையிழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கண்டறியலாம்.

பரம்பரைக் கோளாறினால் ஏற்படும் வண்ணப் பார்வையிழப்பிற்கு சிகிச்சை முறையோ அதைக் குணப்படுத்த மருந்தோ கிடையாது. வண்ணப் பார்வையிழப்பை அந்த நோய்களுக்கு தக்க நேரத்தில் தக்க சிகிச்சை செய்தால் தடுக்கலாம்.

●


கண் நோய்கள், சிகிச்சை முறைகள் பற்றிய உங்கள் சந்தேகங்களை எங்களுக்கு எழுதி அனுப்பவும். உங்களது கேள்விகளுக்கு அரவிந்த் கண் மருத்துவமனை மருத்துவர்கள் பதிலளிப்பார்கள்.

**ஆலோசனைப் பகுதி, கண் ஒளி,**

**அரவிந்த் கண் மருத்துவமனை, 1, அண்ணாநகர், மதுரை – 625020**

**மின்னஞ்சல் மூலமாக உங்கள் கேள்விகளை அனுப்ப:** kannoli@aravind.org

# கண் பரிசோதனை மையம் – விழுப்புரம் மாவட்டம்




தமிழகத்தில் உள்ள அளவில் பெரிய மாவட்டங்களில் விழுப்புரம் மாவட்டமும் ஒன்று. வடதமிழகத்தில் அமைந்துள்ள இம்மாவட்டத்தைச் சுற்றி திருவண்ணாமலை, காஞ்சிபுரம், கடலூர், சேலம், தர்மபுரி மாவட்டங்களும் கிழக்குப் பகுதியில் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசமும் உள்ளது. 2011 ஆம் வருடம் எடுக்கப்பட்ட சென்சஸ் கணக்கெடுப்பின்படி இம்மாவட்டத்தின் மக்கள் தொகை 34.6 லட்சம். செழிப்பான வண்டல் மண் மிகுந்த மாவட்டம் என்பதால் விவசாயமும் அதைச் சார்ந்த தொழில்களுமே முதன்மையாக உள்ளன. நெல், கரும்பு, வேர்க்கடலை, பலா, புளி, பருத்தி, காய்கறிகள் முதலியவை முக்கிய விளைபொருட்களாகும். அரிசி ஆலைகள், சர்க்கரை ஆலைகள், கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை, சிறு தொழில்கள், மீன் பதனிடுதல் போன்றவையும் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளன. விழுப்புரம் மாவட்டத்தில் கண்புரை அறுவை சிகிச்சை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை, பிற மாவட்டங்களை ஒப்பிடும்போது குறைவாகவே உள்ளது. மக்களிடம் போதிய விழிப்புணர்வு தேவை.

| 2017 டிசம்பர் மாதம் வரை விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள அரவிந்த் கண் பரிசோதனை மையங்களில் சிகிச்சை எடுத்துக்கொண்டவர்களின் எண்ணிக்கை | |
|---|---|
| மொத்த வெளிநோயாளிகள் | 1,21,343 |
| கண்ணாடி வாங்கியவர்கள் | 17,189 |
| கண்புரை அறுவை சிகிச்சை செய்து பயன் பெற்றவர்கள் | 3,264 |
| சிறப்பு பிரிவுகளில் சிகிச்சை செய்து பயன் பெற்றவர்கள் | 7,620 |

**மரக்காணம்**
50, பாண்டி மெயின் ரோடு,
பழைய தபால் அலுவலகம் எதிரில்,
மரக்காணம்
தொலைபேசி எண்: 04147 239066

**திருவெண்ணெய்நல்லூர்**
3, காமராஜர் தெரு,
தெத்துபிள்ளையார் கோவில் எதிரில்,
திருவெண்ணெய்நல்லூர்
தொலைபேசி எண்: 04153–234400

**வளவனூர்**
10, மேற்கு பாண்டி மெயின் ரோடு,
கூட்டுறவு வங்கி அருகில்,
வளவனூர்– 605108
தொலைபேசி எண்: 04153–234400

**உளுந்தூர்பேட்டை**
ஸ்ரீ சாரதா ஆசிரமம்
திருச்சி மெயின் ரோடு,
புதிய எடைக்கல், உளுந்தூர்பேட்டை
தொலைபேசி எண்: 04153–234400



*ஒவ்வொரு மாதமும் 10, 11 தேதிகளில் கண் ஒளி இதழ்களை 13000க்கும் மேற்பட்ட சந்தாதாரர்களின் முகவரிகளுக்கு முறையாகச் சரிபார்த்த பின்னரே தபாலில் அனுப்பி வைக்கிறோம். இருப்பினும் வெகு சில சந்தாதாரர்கள் தங்களுக்கு 'கண் ஒளி' இதழ்கள் சரிவர கிடைப்பதில்லை என்றும், ஒரு மாதம் வரும் இதழ் மறு மாதம் வருவதில்லை என்றும் புகாரளிக்கின்றனர். இதழ் கிடைக்கவில்லை எனில் உங்கள் ஊரில் உள்ள தபால் நிலையத்தில் புகாரளிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். மேலும் உங்கள் பகுதி அஞ்சல்துறை பணியாளரிடம் இதழைத் தவறாமல் விநியோகிக்கும்படி கோரவும்.*

***– கண் ஒளி' ஆசிரியர் குழு.***

# அரவிந்த் கண் மருத்துவமனை நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாம்கள் பற்றிய விவரங்கள்

| தேதி | முகாம் நடைபெறும் ஊர் | முகாம் நடைபெறும் இடம் | மாவட்டம் | முகாம் நடத்த உதவுபவர் | மொபைல் |
|---|---|---|---|---|---|
| 14.7.18 | பீர்மேடு | மனமகிழ் மன்றம் | இடுக்கி | தாசில்தார் பீர்மேடு | |
| 15.7.18 | தென்காசி | சுப்புராஜ் மஹால் | திருநெல்வேலி | BSSSSO | 9842132442 |
| 15.7.18 | கொள்ளேகால் | அரசு தாலுகா தலைமை மருத்துவனை | சாம்ராஜ்நகர் | V&M பவுண்டேஷன் பெங்களூர் | 9343968272 |
| 15.7.18 | எரியோடு | அரசு நடுநிலை பள்ளி | திண்டுக்கல் | காமராஜர் நற்பணி மன்றம் | 9486734626 |
| 15.7.18 | தாரமங்கலம் | செங்குந்தர் கல்யாணமஹால் | சேலம் | ரெங்கையா முதலியார் டிரஸ்ட் | 9842077053 |
| 15.7.18 | ஸ்ரீவில்லிபுத்தூர் | லயன்ஸ் மெட்ரிக் பள்ளி | விருதுநகர் | ரோட்டரி சங்கம் | 9944373327 |
| 15.7.18 | எல்லீஸ்நகர் | அரசு மே.நி.பள்ளி | மதுரை | SBI | 9655660866 |
| 18.7.18 | அதிராம்பட்டினம் | சாரா கல்யாணமஹால் | தஞ்சாவூர் | லயன்ஸ் சங்கம் | 9952120166 |
| 18.7.18 | அழகர்சாமிபுரம் | கோவிந்தன், மயில்தாயம்மாள் கல்யாண மஹால் | தேனி | மதுரா மைக்ரோ பைனான்ஸ் | |
| 19.7.18 | தேவராயன் பாளையம் | AKVN மருத்துவமனை | திருப்பூர் | சென்னை சில்க்ஸ் | 8508328773 |
| 19.7.18 | பாளையம் | V.O.C.கிளப் | தேனி | மகாத்மா நுகர்வோர் மன்றம் | |
| 20.7.18 | பொள்ளாச்சி | லயன்ஸ் ஹால் | கோயம்புத்தூர் | லயன்ஸ் சங்கம் | 9994611911 |
| 21.7.18 | கடவூர் | இன்பசேவா சங்கம் | கரூர் | இன்பசேவா சங்கம் டிரெயினிங்செல் | 9042261153 |
| 21.7.18 | அப்பன்திருப்பதி | வைகை வட்டார களஞ்சியம் | மதுரை | வைகை வட்டார களஞ்சியம் | 6380934253 |
| 21.7.18 | கண்டசி/DM கூர்க் | அரசினர் மருத்துவமனை | ஹாசன் | DBCS ஈரோடு மிட்டவுண் | |
| 22.7.18 | திருப்பூர் | லயன்ஸ் ஹால் | திருப்பூர் | லயன்ஸ் சங்கம் | 9442190045 |
| 22.7.18 | மோகனூர் | அரசு பெண்கள் மே.நி.பள்ளி | நாமக்கல் | ஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றம் | 8903516403 |
| 22.7.18 | பட்டம்பி | வியாபாரி பவன் டிரஸ்ட் | பாலக்காடு | சேம்பர் ஆப் காமர்ஸ் | 9846781688 |
| 22.7.18 | திருத்தங்கல் | சரவணா கல்யாணமஹால் | விருதுநகர் | BSSSSO | 9715033465 |
| 22.7.18 | பெருமகளூர் | அரசினர் பள்ளி | தஞ்சாவூர் | ஸ்ரீஆதிபராசக்தி வாரவழிபாட்டு மன்றம் | 9715019287 |
| 22.7.18 | தேவகோட்டை | ராமா யாகம்மை கல்யாணமஹால் | சிவகங்கை | ஸ்ரீயோகிராம் சுரத்குமார் அமைப்பு | 9842473054 |
| 22.7.18 | வெள்ளாளூர் | அரண்சண்முகனார் மண்டபம் | கோயம்புத்தூர் | மக்கள் நலபேரவை | |

| தேதி | முகாம் நடைபெறும் ஊர் | முகாம் நடைபெறும் இடம் | மாவட்டம் | முகாம் நடத்த உதவுபவர் | மொபைல் |
|---|---|---|---|---|---|
| 22.7.18 | தேவனூர் | அரசு உயர் பிரைமரி பள்ளி | மைசூர் | ஸ்ரீ குருமலேஸ்வரா | |
| 22.7.18 | கொடிகுளம் | பஞ்சாயத்து யூனியன் ந.நி.பள்ளி | மதுரை | SBI | 9445863066 |
| 22.7.18 | நரிபையூர் | நாடார் சங்கம் | இராமநாதபுரம் | வட்டார நாடார் சங்கம் | 9092029595 |
| 22.7.18 | பட்டிவீரன்பட்டி | நாடார் கல்யாண மஹால் | திண்டுக்கல் | லயன்ஸ் சங்கம் அய்யம்பாளையம் | |
| 22.7.18 | தேவாரம் | விவேகானந்தர் துவக்கப் பள்ளி | தேனி | லயன்ஸ் சங்கம் போடி | |
| 22.7.18 | சேத்தியாதோப்பு | பஞ்சாயத்து யூனியன் பள்ளி | கடலூர் | லயன்ஸ் சங்கம் | |
| 22.7.18 | நாகபட்டினம் | அரசு பெண்கள் மே.நி.பள்ளி | நாகை | லயன்ஸ் சங்கம் | |
| 22.7.18 | U.கீரனூர் | பஞ்சாயத்து யூனியன் பள்ளி | விழுப்புரம் | லயன்ஸ் சங்கம் உளுந்தூர்பேட்டை | |
| 22.7.18 | வெட்டவளம் | வாசவி கல்யாண மஹால் | திருவண்ணாமலை | லயன்ஸ் சங்கம் | |
| 26.7.18 | கம்பம் | பெப்பின்ஷ் பள்ளி | தேனி | லயன்ஸ் சங்கம் கம்பம் | |
| 27.7.18 | ஹுல்ஹல்லி | அரசினர் மருத்துவமனை | மைசூர் | PMOA | |
| 28.7.18 | ஹன்சூர் | SLV கம்யூனிட்டி ஹால் | மைசூர் | திரு.சின்னசாமி மற்றும் முருகேசன் குடும்பம் | 9448352929 |
| 28.7.18 | T. கல்லுப்பட்டி | அய்யனார் கல்யாண மஹால் | மதுரை | நகர்நல கமிட்டி | 9842175940 |
| 28.7.18 | வளநாடு | இராமரத்தின கல்யாணமஹால் | திருச்சி | Dr.VNL டிரஸ்ட் | 9965560142 |
| 28.7.18 | ஜக்கம்பட்டி | ஆவுடையாச்சி கல்யாண மஹால் | தேனி | மதுரா மைக்ரோ பைனான்ஸ் | |
| 28.7.18 | அமாவாசை பாளையம் | அரசு உயர்நிலைபள்ளி | விழுப்புரம் | லயன்ஸ் சங்கம் திருவெண்ணெய்நல்லூர் | |
| 28.7.18 | மேலையூர் | சீனிவாசா மெட்ரிக் பள்ளி | நாகை | லயன்ஸ் சங்கம் திருவெண்காடு | |
| 29.7.18 | மயிலாடுதுறை | அரசு முனிசிபல் மே.நி.பள்ளி | நாகை | நாராயணா ஜீவல்லரி | |
| 29.7.18 | ஊட்டி | CSI ஹோபர்ட் பள்ளி | நீலகிரி | ரோட்டரி சங்கம் | 9442109100 |
| 29.7.18 | கும்பகோணம் | சரஸ்வதி பாடசாலை | தஞ்சாவூர் | கும்பகோணம் ஹோஸ்ட் | 9443116356 |
| 29.7.18 | பண்ருட்டி | திருவள்ளுவர் பிரைமரி பள்ளி | கடலூர் | ஆரிய வைசிய சமூகம் | |
| 29.7.18 | கண்டம்பாளையம் | SKV மெ.மே.நி.பள்ளி | நாமக்கல் | லயன்ஸ் சங்கம் | 9443258967 |
| 29.7.18 | கடச்சனேந்தல் | பஞ்சாயத்து யூனியன் பள்ளி | மதுரை | ஸ்ரீசத்யசாய் சேவா சமிதி | 9597708923 |
| 29.7.18 | கண்டனூர் | உமையாள் இராமநாதன் கல்யாணமஹால் | சிவகங்கை | மீனாட்சி வைரவன் சாரிட்டபிள் டிரஸ்ட் | 9444111989 |
| 29.7.18 | காட்டூர் | VM மஹால் | திருச்சி | காவேரி சேவா மையம் | 9842453443 |
| 29.7.18 | பெரியநாயக்கன் பாளையம் | கோபாலசாமி கல்யாணமஹால் | கோயம்புத்தூர் | இளைஞர் கிரிக்கெட் சங்கம் | |
| 29.7.18 | K.C.பட்டி | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | திண்டுக்கல் | ரூரல் ஹெல்த் சென்டர் | |

| தேதி | முகாம் நடைபெறும் ஊர் | முகாம் நடைபெறும் இடம் | மாவட்டம் | முகாம் நடத்த உதவுபவர் | மொபைல் |
|---|---|---|---|---|---|
| 29.7.18 | விழுப்புரம் | அரசினர் பள்ளி | விழுப்புரம் | ரோட்டரி சங்கம் | |
| 29.7.18 | வந்தவாசி | அரசு பெண்கள் மே.நி.பள்ளி | திருவண்ணாமலை | M.S.ஜீவல்லரி | |
| 1.8.18 | கன்னியாகுமரி | விவேகானந்த கேந்திரா ஹால் | கன்னியாகுமரி | விவேகானந்த கேந்திரா | 9486030438 |
| 2.8.18 | தேவராயன் பாளையம் | AKVN மருத்துவமனை | திருப்பூர் | சென்னை சில்க்ஸ் | 8508328773 |
| 2.8.18 | கட்டிகுளம் | கம்யூனிட்டி ஹால் | சிவகங்கை | KVT ஹெல்த் சென்டர் | 9444082560 |
| 4.8.18 | தருமபுரி | ரோட்டரி ஹால் | தருமபுரி | ரோட்டரி சங்கம் | 9842761659 |
| 4.8.18 | சிந்தாமணி | R.C. பிரைமரி பள்ளி | திருநெல்வேலி | ராஜகோபால் நாயக்கர் டிரஸ்ட் | 9865493488 |
| 4.8.18 | செங்கம் | கணேசர் திருமண மண்டபம் | திருவண்ணாமலை | கணேசர் குரூப்ஸ் | |
| 5.8.18 | சாம்ராஜ் நகர் | அரசினர் மருத்துவமனை | சாம்ராஜ் நகர் | DBCS சாம்ராஜ் நகர் | 9945228015 |
| 5.8.18 | வடசேரி | SMRV மே.நி.பள்ளி | கன்னியாகுமரி | BSSSSO | 9578678075 |
| 5.8.18 | கொப்பம் | லயன்ஸ் பள்ளி பாலக்காடு | பாலக்காடு | லயன்ஸ் சங்கம் | 9349458196 |
| 5.8.18 | திருப்பரங்குன்றம் | மாதா அமிர்தானந்தமயி மடம் | மதுரை | மாதா அமிர்தானந்தமயி மடம் | 9443337080 |
| 5.8.18 | மேட்டுப்பாளையம் | ஜெயின் சங்கம் பில்டிங் | கோயம்புத்தூர் | ஜெயின் சங்கம் | 9865789137 |
| 5.8.18 | கோபிசெட்டிப் பாளையம் | சின்ன வைரவிழா எலிமெண்டரி பள்ளி | ஈரோடு | லயன்ஸ் சங்கம் | 9791966759 |
| 5.8.18 | திருவண்ணாமலை | கார்மெல் மெ.பள்ளி | திருவண்ணாமலை | சாயர் ஜீவல்லர்ஸ் | |
| 5.8.18 | பொன்மேனி | அரசு .பள்ளி | மதுரை | SBI | 9445862304 |
| 11.8.18 | சத்தியமங்கலம் | ரோட்டரி ஹால் | ஈரோடு | ரோட்டரி சங்கம் சத்தி | 9943011211 |
| 11.8.18 | தருமபுரி | சந்திரபாலசுப்பிரமணியம் மெ.பள்ளி | தருமபுரி | ஹேமலதா டிரஸ்ட் | 9942253585 |
| 11.8.18 | நஞ்சன்கூடு | டவுன் டென்னிஸ் கிளப் | மைசூர் | டவுன் டென்னிஸ் கிளப் | 9019126767 |
| 11.8.18 | உடுமலைப்பேட்டை | லயன்ஸ் ஹால் | திருப்பூர் | லயன்ஸ் சங்கம் | 9894623625 |
| 12.8.18 | R.R. நகர் | ஸ்ரீராம் பிரைமரி பள்ளி | விருதுநகர் | ராம்கோ சிமெண்ட் | 9994497864 |
| 12.8.18 | ஈரோடு | செங்குந்தர் ஆண்கள் மே.நி.பள்ளி | ஈரோடு | லயன்ஸ் சங்கம் | 9443405016 |
| 12.8.18 | தலைவாசல் | அரசு பெண்கள் மே.நி.பள்ளி | சேலம் | அய்யப்ப பஜனை மண்டல் | 9894952593 |

# கண் தானம் செய்த வள்ளல்கள்

## அரவிந்த் – மதுரை

## நவம்பர்-2017

கலியபெருமாள்.P - திருநாகேஸ்வரம்.
ராஜகோபாலன்.K. - கும்பகோணம்.
ஆண்டாள் -நாச்சியார் கோவில்.
திருஞானம்.S - கும்பகோணம்.
சேமத்தம்மாள்.K - வேதாரண்யம்.
ராணி - மதுரை.
சாந்தா.N.R. - மதுரை.
சங்கர்.G.R. - மதுரை.
மதியழகன்.E. - ஆயக்காரன்புலம்.
ஆதி ஸ்ரீ - மதுரை.
பழனியப்பன்.C - விருதுநகர்.
கோபாலகிருஷ்ணன் - மதுரை.
பாலகிருஷ்ணன் - தேனி.
பவுன்தாய் - தேனி.
ஹரிஹரன்.A.R. - அம்மாபேட்டை.
குருமூர்த்தி.G - செம்பனார் கோவில்.
வைரக்கண்ணு ஆச்சி-ஆயக்காரன்புலம்.
சுப்ரமணியன்.M.T. - மதுரை.
சுரேந்திரன்.K.R. - மதுரை.
அறிவழகன் - மதுரை.
தென்னரசு பாண்டியராஜு-
-சேதுபாண்டி.G. - திண்டுக்கல்.
மதுபாலன் - இராமநாதபுரம்.
அன்னலெட்சுமி.R. - வேதாரண்யம்.
சச்சிதானந்தம்.V. - ஆயக்காரன்புலம்.
லெட்சுமி - கும்பகோணம்.
தட்சணாமூர்த்தி.S.-ஆயக்காரன்புலம்.
சண்முகவடிவேல்.R.-ஆயக்காரன்புலம்.
சந்திரா.S. - ஆயக்காரன்புலம்.
ருக்குமணி - திண்டுக்கல்.
சிதம்பரதேவர்.V. - வேதாரண்யம்.
சமுத்திரவள்ளி.S. - மதுக்கூர்.
வைத்தியநாத தேவர்.R. - ஆயக்காரன்புலம்.
பவானி அம்மாள்.R. - ஆயக்காரன்புலம்.
தையல்நாயகி.M. - வேதாரண்யம்.
தாயம்மாள்.G. - மதுரை.
ராஜன்.M. - மதுரை.
வெங்கடேஸ்வரன்.RM.A.K.- மதுரை.
மாரியப்பதேவர்.A. - வேதாரண்யம்.
மோதிலால்.S.S. - திண்டுக்கல்.
காந்திமதி.K.- மதுரை.
இரத்தினதேவர்.G.-ஆயக்காரன்புலம்.
வத்சலா.S. - திருநாகேஸ்வரம்.
தங்கம்மாள்.M. - கபிஸ்தலம்.
கண்ணன் - மதுரை.
பாண்டியன் - மதுரை.
முத்துகண்ணு.P.- மயிலாடுதுறை.
மனோன்மணி.R. - கும்பகோணம்.
தனம் - இராமநாதபுரம்.
பரமநாதன் - மதுரை.
சிங்காரவேலா.P. - மதுக்கூர்.
வடிவேல்.S. - திருநாகேஸ்வரம்.
குஞ்சம்மாள் ஆச்சி.S. - ஆயக்காரன்புலம்.
துரைராஜ் தேவர்.R.- ஆயக்காரன்புலம்.
கண்ணன் - மதுரை.
மாலதி - மதுரை.
கவிதா.A.- ஒரத்தநாடு.
சுந்தரராஜூலு.A.- குடந்தை காவேரி.
சௌந்தரவள்ளி - மன்னார்குடி.
தர்மசாமி தேவர்.V.-ஆயக்காரன்புலம்.
சிற்றம்பலம்.N. - கும்பகோணம்.
ராஜசேகரன்.A.P. - மதுரை.
இந்திரா - மதுரை.
பொன்ராஜ் - தேனி.
லோகநாதன்.S.- தேனி.
நாகூரான் - ஆயக்காரன்புலம்.
சிதம்பரம்.T.M. - பட்டுக்கோட்டை.
கிருஷ்ணமூர்த்தி.R. - பாபநாசம்.
அனிதா.S.- சேலம்.
சிவராதாகிருஷ்ணன் - பரமக்குடி.
செல்வராஜூ.G. - ஆயக்காரன்புலம்.
துரைராஜ்.K. - ஆடுதுறை.
திருப்பதி - மதுரை.
கோவிந்தம்மாள்.V. - வேதாரண்யம்.
நீலாவதி.T. - பாபநாசம்.
கௌதம் - மதுரை.
சுப்ரமணியன்.A.A. - மதுரை.
அங்காயிஅம்மாள் - தாராசுரம்.
ஹரிலெட்சுமி.M.R. - மதுரை.
சுந்தர்பாண்டி - மதுரை.
மீனாட்சி - தேனி.
விஜயகுமார் - மதுரை.
சாராதாம்பாள் ஆச்சி.K. - ஆயக்காரன்புலம்.
செந்தமிழ் செல்வி.C. - கும்பகோணம்.
பெரியசாமி - ஆயக்காரன்புலம்.
சீதாராமன்.A. - கும்பகோணம்.
மதனவள்ளி.K. - திருநாகேஸ்வரம்.
சரஸ்வதி அம்மாள்.K.- ஆயக்காரன்புலம்.

2018 ம் ஆண்டில் ஜூன் மாதம் (25.6.18 வரை) நமது ரோட்டரி அரவிந்த் அகில உலக கண் வங்கி மூலம் கண்களைத் தானமாகப் பெற்று கண்ஒளி பெற்றவர்களின் எண்ணிக்கை: **615.**

இறந்தவர்களின் கண்களைத் தானம் செய்யவும் அதைப் பற்றிய வழிமுறைகளைப் பற்றி விரிவாகத் தெரிந்துக் கொள்ளவும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

***ரோட்டரி அரவிந்த் அகில உலக கண் வங்கி***
***அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை-625 020, தொலைபேசி எண்: 0452 - 4356100; Ext: 421***

*Owned and published by Dr. G. Natchiar from Aravind Eye Hospital, 1, Anna Nagar, Madurai - 625 020 and Printed by N. Seshadri at Graphico, No, 172, Vakil New Street, Simmakkal, Madurai - 625 001. Editor: Dr. G. Natchiar / Annual Subscription Rs.25/-*

# தூரப்பார்வை உள்ளவருக்கு வருடத்திற்கு ஒருமுறை பரிசோதனை அவசியம்

தூரப்பார்வை கோளாறு உள்ளவர்களால் தொலைவில் உள்ள பொருட்களைத் தெளிவாகக் காண இயலாது. இவர்களுக்குக் கண்ணாடி போட்டால் இக்கோளாறு சரியாகிவிடும். சிலர் ஒட்டுக் கண்ணாடி பொருத்துவர். சிலர் லேசிக் சிகிச்சை செய்து கொள்வர். இத்துடன் இந்தப் பிரச்சனை முடிந்துவிட்டதாகப் பலரும் கருதுகின்றனர். ஆனால் உண்மை அதுவல்ல. தூரப்பார்வை உள்ளவர்களுக்கு வேறொரு பெரிய பிரச்சனை கண்ணுக்குள் தொடர்ந்து கொண்டிருக்கிறது. அதனை அறிய ஆண்டுதோறும் கண்களைப் பரிசோதனை செய்துகொள்வது மிகமிக அவசியமாகும்.

பெரும்பாலும் தூரப்பார்வை பிரச்னை விழிப்பந்து விரிவடைவதால் உண்டாகிறது (வேறு சில காரணிகளும் உண்டு). குழந்தைப்பருவத்தில் விழிப்பந்தின் விரிவாக்கத்துக்கு ஏற்ப லென்சும் விரிவடையும். இதனால் இரண்டும் சமனிலை எய்திவிடும். பதினெட்டு வயதுக்குப் பிறகு விழிப்பந்து விரிவடைவது நின்றுவிடும். ஆனால் தூரப்பார்வை கோளாறு உள்ளவர்களுக்கு மட்டும் விழிப்பந்து விரிவடைவது தொடரும். இதனால் விழித்திரையும் இழுக்கப்படும்.

விழித்திரையின் தசைநார்கள் இணைந்து தான் பார்வை நரம்பாக உருவாகின்றன. இந்த நரம்பு மூலமாக கண்களிலிருந்து மூளைக்கு சமிக்ஞைகள் அனுப்பப்படுகிறது. இந்த விழித்திரை குழந்தைப் பருவத்தில் மட்டுமே வளரும். அதன் பிறகு இதில் வளர்ச்சி இல்லாததால் இதில் பிரச்சனைகள் வந்தால் குணமாகாது. விழிப்பந்து விரிவடையும் (தூரப்பார்வை) போது விழித்திரையும் இழுபடுகிறது. அப்போது விழித்திரை பிரிந்து துளை விழுந்துவிடும். இதனால் பார்வையில் எந்த மாற்றமும் ஏற்படாது. எந்த அறிகுறியும் வெளியே தெரியாது. ''இன்டைரக்ட் ஆஃப்தால்மாஸ்கோப்'' போன்ற கருவிகள் மூலமாகப்பார்த்து மருத்துவர்களால் மட்டுமே இந்தப் பிரச்சனை இருப்பதை அறிந்து கொள்ள முடியும். விழித்திரை இழுபடும்போது, கண்ணை விட்டு பிரிந்து விடுதல், துளை விழுதல், கிழிந்து விடுதல் போன்ற பிரச்சனைகள் ஏற்படும். இந்நிலை ஏற்பட்டதும் திடீரென பார்வை பறிபோய் விடும். விழித்திரை பிரிதல் (Retinal Detachment) என்ற இப்பிரச்சனைக்கு அறுவை சிகிச்சை செய்து அதன் மூலமாக பிரிந்த விழித்திரையை இணைக்கலாம். ஆனால் இழந்த பார்வையை முழுமையாகத் திரும்பப் பெற இயலாது. சிறிதளவே திரும்பப் பெறலாம்.

விழிப்பந்தின் விரிவாக்கத்தைத் தடுத்து நிறுத்த யாராலும் இயலாது. ஆண்டுதோறும் முறையாக மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டால் ஆரம்பநிலையிலேயே விழித்திரை பிரச்சனையை அறிந்து அந்நிலையிலேயே அதனை தடுத்து நிறுத்தலாம். தூரப்பார்வை பிரச்சனை உள்ளவர்கள் ஆண்டுதோறும் விழித்திரைப் பரிசோதனை செய்தால் வரவிருக்கும் பார்வையிழப்பு சோகத்தைத் தவிர்க்கலாம். இவர்களுக்குக் கண்ணில் சிறு பிரச்சனை ஏற்பட்டாலும் அதனால் விழித்திரை பிரிதலும் பார்வையிழப்பும் ஏற்படுவது உறுதி என்பதால் எந்த சிறுபிரச்சனையையும் இவர்கள் அலட்சியப்படுத்தக்கூடாது. அடிக்கடி கண்களைப் பரிசோதிப்பது நல்லது. .

சிலருக்குக் கண்ணில் பூச்சி பறப்பது போலத் தெரியும். பார்வைக் களத்தில் கறுப்புப் புள்ளிகள் தோன்றும். இருட்டில் இருக்கும்போது கண்ணுக்குள் மின்னல் வெட்டுவது போலிருக்கும். இந்த அறிகுறிகள் தோன்றினால் உடனே விழித்திரை பரிசோதனை அவசியமாகும். வயதானவர்களுக்கு லென்சுக்கும் விழித்திரைக்கும் இடையில் உள்ள நீர்மம் உலர்வதால் கண்ணுக்குள் பூச்சி பறப்பது போன்ற தோற்றம் ஏற்படுவதுண்டு. ஆனால் இது முதுமைப் பிரச்சனை தானா? என்பதை தேர்ந்த கண் மருத்துவரை அணுகி மருத்துவப் பரிசோதனை செய்த பிறகே தெளிவாக அறிய முடியும். எனவே விழித்திரை பிரிதலை வருமுன் காப்போம்: வளமாய் வாழ்வோம்.

●